TNPSCJOB

# Don

# சமூக அறிவியல்

## PMB

## 6




இணைப்பு

வண்ண வரைபடங்கள் & வரைபடப் பயிற்சி புத்தகம்

முழுமையாக திருத்தப்பட்ட பதிப்பு


**பருவம் - I**

**+**

**பருவம் - II**

**+**

**பருவம் - III**



- புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது.
- அனைத்து பாடநூல் வினாக்கள் + கூடுதல் வினாக்கள் - தெளிவான விடைகளுடன்.
- மூன்று பருவங்களுக்கும் மாதிரி வினாத்தாட்கள்

டான் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



# அலகு 1 வரலாறு என்றால் என்ன?

## வரலாறு



### சிறு சிறு துளிகளாய்

- வரலாறு என்பது கடந்தகால நிகழ்வுகளின் காலவரிசைப்பதிவு ஆகும்.
- வரலாற்றின் காலம் ஆண்டுகளில் கணக்கிடப்படுகிறது.
- பொ. ஆ. மு என்பது பொது ஆண்டிற்கு முன் என்பதாகும்.
- நாட்குறிப்புகள் கடந்தகால அறிவைத் தருகின்றன.
- நாணயம் தொடர்பான அறிவியல் துறை நாணயவியல்.
- வரலாற்றின் ஆதாரங்கள் தொல்பொருள் மற்றும் இலக்கிய ஆதாரங்கள் என இரு வகைப்படும்.
- வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கும் வரலாற்றுக் காலத்துக்கும் இடைப்பட்ட காலம் தொடக்கக் கால வரலாறு.
- மனிதன் முதல் பழக்கிய விலங்கு நாய்.
- உலகிலேயே விலங்குகளுக்கு மருத்துவ மனைகளை அமைத்தவர் பேரரசர் அசோகர் ஆவார்.
- அசோகர் பற்றிய ஆதாரங்களை வெளியிட்டவர் சார்லஸ் ஆலன்.
- சாஞ்சிஸ்தூபி, சாரநாத் கற்றூண் அசோகரின் பெருமையை நமக்கு எடுத்தியம்புகின்றன.

## I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

**பாடநூல் வினா**

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்
இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

விடை: ஆ



TNPSCJOB | www.tnpscjob.com

**கூடுதல் வினாக்கள்:**

2. "இஸ்டோரியா" என்பதன் பொருள்
   அ) வரலாறு  ஆ) நாணயவியல்
   இ) கல்வெட்டியல்  ஈ) விசாரிப்பதன் மூலம் கற்றல்
   விடை: ஈ
3. கற்கால இடங்களுள் ஒன்று
   அ) சென்னை  ஆ) டெல்லி
   இ) ஆரா  ஈ) புர்ஜ்ஹோம்
   விடை: ஈ
4. பின்வருவனவற்றில் தொல்பொருள் ஆதாரம் என்பது
   அ) திருவாசகம்  ஆ) பானைகள்
   இ) இதிகாசங்கள்  ஈ) நாட்டுப்புற பாடல்கள்
   விடை: ஆ
5. விலங்குகளுக்கென முதன் முதலில் மருத்துவமனைகள் அமைத்தவர்
   அ) அசோகர்  ஆ) அக்பர்
   இ) கரிகாலன்  ஈ) அலெக்ஸாண்டர்
   விடை: அ

## II கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு:

**பாடநூல் வினாக்கள்:**

1. கூற்று : பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும் போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.
   காரணம் : குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.
   அ) கூற்று சரி, காரணம் தவறு
   ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி
   இ) கூற்று தவறு, காரணம் சரி
   ஈ) கூற்று தவறு, காரணம் தவறு
   விடை: ஆ
2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருள்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?
   அ) அருங்காட்சியகங்கள்
   ஆ) புதைபொருள் படிமங்கள்
   இ) கற்கருவிகள்
   ஈ) எலும்புகள்
   விடை: அ
3. தவறான இணையைக் கண்டுபிடித்து எழுதுக :
   அ) பழைய கற்காலம் – கற்கருவிகள்
   ஆ) பாறை ஓவியங்கள் – குகைச் சுவர்கள்
   இ) செப்புத் தகடுகள் – ஒரு வரலாற்று ஆதாரம்
   ஈ) பூனைகள் – முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு
   விடை: ஈ
4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடித்து எழுதுக:
   அ) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.
   ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.
   இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதாக வரைந்திருக்கலாம்.
   ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.
   விடை: ஈ



Don

**கூடுதல் வினாக்கள்:**

5. தவறான இணையைக் கண்டுபிடித்து எழுதுக : — விடை: ஈ
   அ) கர்நாடகா - ஹன்சாகி பள்ளத்தாக்கு
   ஆ) குஜராத் - லோத்தல்
   இ) தமிழ்நாடு - ஆதிச்ச நல்லூர்
   ஈ) கேரளா - சிரண்ட்

6. கூற்று I : அசோகர் புத்த மதத்தை பின்பற்றினார். — விடை: ஆ
   கூற்று II : அசோகர் கலிங்கப் போரில் தோல்வியுற்றார்.
   அ) கூற்று I மற்றும் கூற்று II சரி
   ஆ) கூற்று I சரி மற்றும் கூற்று II தவறு
   இ) கூற்று I மற்றும் II தவறு
   ஈ) கூற்று I தவறு மற்றும் கூற்று II சரி

## III கோடிட்ட இடங்களை நிரப்புக:

**பாடநூல் வினாக்கள்:**

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் _______.
2. வரலாற்றின் தந்தை _______.
3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு _______.
4. கல்வெட்டுகள் _______ ஆதாரங்கள் ஆகும்.
5. அசோகச்சக்கரத்தில் _______ ஆரக்கால்கள் உள்ளன.

**விடைகள்**
1. குகைகள்
2. ஹெறோடொட்டஸ்
3. நாய்
4. தொல்பொருள்
5. 24

**கூடுதல் வினாக்கள்:**

6. _______ என்பது கடந்தகால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு ஆகும்.
7. வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான _______ என்பதிலிருந்து பெறப்பட்டது.
8. பழைய கற்கால இடமான _______ மத்தியப் பிரதேசத்தில் உள்ளது.
9. தமிழ்நாட்டில் வெண்கலக்காலம் காணப்பட்ட இடம் _______.
10. நாணயங்கள் _______ ஆதாரங்கள் ஆகும்.

**விடைகள்**
6. வரலாறு
7. இஸ்டோரியா
8. பிம்பேட்கா
9. ஆதிச்சநல்லூர்
10. தொல்பொருள்

## IV சரியா? தவறா? என எழுதுக:

**பாடநூல் வினாக்கள்:**

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன. — விடை: சரி
2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. — விடை: சரி
3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது. — விடை: சரி



Don



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

## V பொருத்துக:

### பாடநூல் வினாக்கள்:

| | | | விடை |
|---|---|---|---|
| 1. பாறை ஓவியங்கள் | – | அ) செப்பேடுகள் | ஈ |
| 2. எழுதப்பட்டப்பதிவுகள் | – | ஆ) மிகவும் புகழ்பெற்ற அரசர் | அ |
| 3. அசோகர் | – | இ) தேவாரம் | ஆ |
| 4. மதச்சார்புள்ள இலக்கியம் | – | ஈ) வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது | இ |

## VI ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்:

### பாடநூல் வினாக்கள்:

1. நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் இரண்டைக் கூறுக.
   - நம்முடைய வாழ்க்கை முறைகளை எதிர்காலச் சந்ததியினருக்குத் தெரியப்படுத்த உதவும்.
   - நம் காலத்தில் நடைபெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாக நாட்குறிப்புகள் வருங்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டும்.
2. வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்?
   - கற்கருவிகள்
   - பாறை ஓவியங்கள்
   - புதை படிவங்கள்
   - அகழாய்வுப் பொருட்கள்

   ஆகியவை மூலம் வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ளலாம்.
3. கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச்சான்றா?
   - இல்லை. அது ஓர் தொல்பொருள் சான்றாகும்.
4. வரலாற்று தொடக்கக் காலம் (Proto History) என்றால் என்ன?

   வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கும் வரலாற்றுக் காலத்துக்கும் இடைபட்டது வரலாற்று தொடக்கக் காலம் எனப்படுகிறது.
5. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுது.

   மணிமேகலை

### கூடுதல் வினாக்கள்:

6. "இஸ்டோரியா" (Istoria) என்பதன் பொருள் என்ன?

   விசாரிப்பதன் மூலம் கற்றல்.
7. வரலாற்றின் ஆதாரங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
   - தொல்பொருள் ஆதாரங்கள்
   - இலக்கிய ஆதாரங்கள்
8. உலகில் முதன் முதலில் விலங்குகளுக்கான மருத்துவமனையைக் கட்டியவர் யார்?

   பேரரசர் அசோகர்
9. அசோகர் பின்பற்றிய மதத்தின் பெயர் என்ன?

   புத்த சமயம்
10. கல்வெட்டுகளிலுள்ள செய்திகளை ஆராயும் துறையின் பெயரை எழுதுக.

    கல்வெட்டியல்





TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

11. மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளியுலகுக்கு கொண்டு வந்த வரலாற்று ஆய்வாளர்கள் பெயரைக் குறிப்பிடுக.

- வில்லியம் ஜோன்ஸ்
- ஜேம்ஸ் பிரின்செப்
- அலெக்ஸாண்டர் கன்னிங்காம்

## VII கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:

### பாடநூல் வினாக்கள்:

1. வரலாறு என்றால் என்ன?

வரலாறு என்பது கடந்தகால நிகழ்வுகளின் கால வரிசைப் பதிவு ஆகும்.

2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.

வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது கற்கருவிகளை பயன்படுத்தியதற்கும் எழுதும் முறைகளை கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை?

- கற்கருவிகள்
- புதை படிவங்கள்
- பாறை ஓவியங்கள்

போன்ற தொல்லியல் சான்றுகள் மூலம் அறியலாம்.

4. வரலாற்றுக்கு முந்தையக் காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு | – | அத்திரம் பாக்கம், ஆதிச்சநல்லூர், பையம் பள்ளி |
| கர்நாடகா | – | ஹன்சாகி பள்ளத்தாக்கு |
| மத்தியப் பிரதேசம் | – | பிம்பேட்கா |
| ஆந்திரப் பிரதேசம் | – | பிரம்மகிரி |

5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?

- பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள பயன்படுகிறது.
- ஆராய்ச்சித் துறை மாணவர்களுக்குத் தேவையான தகவல்களை தரும் இடமாக விளங்குகிறது.
- பொழுதுபோக்கோடு சிறந்த அறிவை வளர்த்துக் கொள்ளும் இடமாகவும் விளங்குகிறது.

6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறுக.

- விலங்குகளின் எலும்புகள் மற்றும் கொம்புகள்
- கரடு முரடான கூர்மையாக்கப்பட்ட கற்கருவிகள்
- கூர்மையாக்கப்பட்ட மரக்கிளைகள்.

7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன?

- வேட்டைக்குச் சென்றவர்கள் அங்கு நடந்தவற்றை தங்களோடு வர இயலாதவர்களுக்கு காட்டுவதற்கு பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் ஓவியங்களைத் தீட்டியிருக்கலாம்.
- பொழுதுபோக்காகவும் வரையப்பட்டிருக்கலாம்.

8. தொல் கைவினைப் பொருட்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக

- பானைகள்
- பொம்மைகள்
- கருவிகள்
- அணிகலன்கள்



Don



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## கூடுதல் வினாக்கள்:

**9. ஏதேனும் நான்கு நினைவுச் சின்னங்களைக் குறிப்பிடுக.**

அரண்மனைகள் – மதுரை திருமலை நாயக்கர் மஹால்
கோட்டைகள் – வேலூர் கோட்டை
கோயில்கள் – தஞ்சை பெரிய கோயில்
ஸ்தூபிகள் – சாஞ்சி

**10. வரலாற்றுச் சான்றுகளைப் பட்டியலிடுக.**

- நினைவுச் சின்னங்கள்.
- வெளிநாட்டவர் பயணக் குறிப்புகள்
- செப்புப் பட்டயங்கள்
- நாட்டுப்புறக் கதைகள்

**11. நாணயவியல் என்றால் என்ன?**

நாணயம், அதன் வரலாறு தொடர்பான அறிவியல் சார்ந்த துறையாகும்.

**12. இலக்கிய ஆதாரங்களைப் பட்டியலிடுக.**

- இதிகாசங்கள், பாடல்கள்
- வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள்
- இந்திய ஆசிரியர்களின் நூல்கள்
- நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

## VIII உயர் சிந்தனை வினாக்கள்:

### பாடநூல் வினாக்கள்:

**1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது?**

- பழங்கால மனிதர்கள் குகைகளில் வாழ்ந்தனர்.
- வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்தனர்.
- குகைகள் அவர்களுக்கு பாதுகாப்பான சூழலில் அமையவில்லை.
- கொடிய விலங்குகள் திடீரென குகைகளுக்குள் நுழைந்து விடும்.
- அதனை மனிதர்களால் அறிய முடியாமல் போவதுண்டு.
- ஆனால், நாய்கள் தமது கூரிய மோப்ப உணர்வினால் விலங்குகளின் வருகையை அறிந்து குரைத்தன.
- இதனைக் கண்ட மனிதர்கள் நாய்களை பழக்கி தங்கள் பாதுகாப்பிற்கும், வேட்டையாடுவதற்காகவும் பயன்படுத்தினர்.

**2. பழையகற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப்பார்.**

| பழைய கற்கால வாழ்க்கை முறை | தற்கால வாழ்க்கை முறை |
|---|---|
| • பழைய கற்கால மனிதன் உணவைத் தேடி நாடோடி வாழ்க்கை வாழ்ந்தான். | • தற்கால மனிதன் குடியிருப்புகளை அமைத்து நிலையாக தங்கி வாழ்கிறான். |
| • இலை, மரப்பட்டைகள், விலங்குகளின் தோல்களை ஆடையாக உடுத்தினான். | • பருத்தி, பட்டு, கம்பளி மற்றும் செயற்கை இழை துணிகளை ஆடையாக உடுத்துகிறான். |
| • காய்கள், கனிகள், கிழங்குகள் மற்றும் இறைச்சியை உண்டான். | • காய்கள், கனிகள், கிழங்குகள் இவைகளை வேக வைத்து உண்கிறான். |
| • குகைகளில் வாழ்ந்தான். | • வீடுகள் கட்டி வாழ்கிறான். |
| • இயற்கையை அண்டி வாழ்ந்தான். | • நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வாழ்கிறான். |

Don



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

**கூடுதல் வினா:**

3. அசோகர் சிறந்த பேரரசராக கருதப்படக் காரணம் என்ன?

- பண்டைய இந்தியப் பேரரசர்களில் பேரும் புகழும் பெற்ற அரசர் அசோகர் ஆவார்.
- வெற்றிக்குப் பின் போரைத் துறந்த முதல் அரசர் இவர் தான்.
- போரில் பல உயிர்கள் மடிவதைக் கண்டு புத்த சமயத்தைத் தழுவி அமைதியையும் அறத்தையும் பரப்ப தம் வாழ்வை அர்ப்பணித்தார்.
- உலகிலேயே விலங்குகளுக்கென தனிமருத்துவமனை அமைத்தவரும் இவரே.
- அவர் உருவாக்கிய சாலைகளை இன்றும் நாம் பயன்படுத்தி வருகிறோம்.
- பொதுமக்களுக்கு அவர் ஆற்றிய சேவை முன்மாதிரியாக விளங்கியது.
- இதிலிருந்து அசோகர் ஒரு சிறந்த பேரரசர் என்பதை அறியலாம்.

## IX கட்டக வினாக்கள்:

**பாடநூல் வினாக்கள்:**

| | | |
|---|---|---|
| அன்று மனிதர்கள் என்மீது கிறுக்கினார்கள்; வண்ண மை கொண்டு ஓவியம் வரைந்தனர். இன்று என்னை உடைத்து வீடுகள், சாலைகள் அமைக்கின்றனர். நான் யார்<br>விடை:<br>பாறை. | ஏதேனும் இரு தொல் பொருள் ஆதாரங்களைக் கூறு.<br>விடை:<br>நாணயங்கள், கல்வெட்டுகள். | இலக்கியச் சான்றுகளின் வகைகளைக் கூறு.<br>விடை:<br>மதச்சார்பற்ற இலக்கியங்கள், மதச்சார்புள்ள இலக்கியங்கள். |
| பொ. ஆ. மு. இதன் விரிவாக்கம் என்ன?<br>விடை:<br>பொது ஆண்டிற்கு முன். | 'இஸ்டோரியா' என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள்?<br>விடை:<br>விசாரிப்பதன் மூலம் கற்றல். | பொ. ஆ. இதன் விரிவாக்கம் என்ன?<br>விடை:<br>பொது ஆண்டு. |
| கல்வெட்டுக் குறிப்புகளைப் பற்றி ஆராயும் துறை ________ .<br>விடை:<br>கல்வெட்டியல். | நாணயங்களை ஆராயும் துறை ________ .<br>விடை:<br>நாணயவியல். | நீங்கள் பேச, பார்க்க, கேட்க, எழுத, படிக்க, உதவுவேன். நானின்றி இவ்வுலகம் இல்லை. நான் யார்?<br>விடை:<br>கணினி. |





TNPSCJOB | www.tnpscjob.com